# கைவினை ஆய்வு மன்றம் 2026

## கைவினைப் பாரம்பரிய ஆய்வுக்கான சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சி

**கருப்பொருள்:**
**கைவினை மரபுகளைப் பாதுகாத்தல்: பாரம்பரியம், புத்தாக்கம் மற்றும் சமூக இணைப்பை உருவாக்குதல்**
*(ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் சமூக ஒத்துழைப்பின் மூலம் கைவினைப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல்)*

**திகதி:** 30 அக்டோபர் 2026

**இடம்:** இலங்கை நிகழ்கலை மற்றும் காட்சிக்கலைப் பல்கலைக்கழகம் (UVPA), இலங்கை

**மகுட வாக்கியம்:**
**ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் சமூக ஒத்துழைப்பின் மூலம் கைவினைப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல்**

## அறிமுகம்

கைவினை ஆய்வு மன்றம் 2026 என்பது கைவினை மற்றும் கலாசார பாரம்பரியத் துறைகளில் ஆராய்ச்சி, நடைமுறை, புத்தாக்கம் மற்றும் சமூகப் பங்களிப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப்படும் சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சி தளமாகும். இம்மன்றம் ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், கைவினைஞர்கள், வடிவமைப்பாளர்கள், கலைஞர்கள், கொள்கை வடிவமைப்பாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் கலாசார நிறுவனங்களை ஒருங்கிணைத்து, சமகால சமூகத்தில் கைவினைகளின் மாறிவரும் பங்கை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்நிகழ்வில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிப்புகள், நடைமுறை அடிப்படையிலான ஆராய்ச்சி விளக்கங்கள், கண்காட்சிகள், நேரடி செயல்விளக்கங்கள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு நிகழ்வுகள் இடம்பெறும். இவை இலங்கையின் கைவினைப் பாரம்பரியத்தை கொண்டாடி வலுப்படுத்துவதோடு, உலகளாவிய கலந்துரையாடல் மற்றும் ஒத்துழைப்பிற்கும் வழிவகுக்கும்.

## நோக்கங்கள்

மன்றத்தின் நோக்கங்கள்:

• பாரம்பரிய மற்றும் சமகால கைவினை நடைமுறைகள் தொடர்பான ஆராய்ச்சியை ஊக்குவித்தல்.

• கைவினைப் பாரம்பரியத்தின் ஆவணப்படுத்தல் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல்.

• பாரம்பரிய கைவினைத் துறைகளில் புத்தாக்கத்தை ஊக்குவித்தல்.

• கைவினை, சமூகங்கள் மற்றும் கலாசார அடையாளங்களுக்கிடையிலான தொடர்புகளை வலுப்படுத்துதல்.

• ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நடைமுறை நிபுணர்களுக்கிடையிலான பல்துறை ஒத்துழைப்பை ஊக்குவித்தல்.

• அறிவுப் பரிமாற்றம் மற்றும் பொதுமக்கள் பங்கேற்பிற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.

## மன்ற நிகழ்வுகள்

• கைவினைக் கண்காட்சிகள்

• நேரடி கைவினை செயல்விளக்கங்கள்

• பயிற்சிப் பட்டறைகள்

• ஆய்வுக் கட்டுரை விளக்கவுரைகள்

• ஒலி-ஒளி விளக்கக்காட்சிகள்

• ஆவணப்படத் திரையிடல்கள்

• சமூக பங்கேற்பு நிகழ்வுகள்

• தொடர்பமைப்பு (Networking) அமர்வுகள்

# கருப்பொருள் பிரிவுகள்

பின்வரும் கருப்பொருட்களின் கீழ் ஆய்வுகள் மற்றும் முன்மொழிவுகள் வரவேற்கப்படுகின்றன:

## 1. பாரம்பரிய கைவினைகள் மற்றும் சமகாலத் தழுவல்கள்

பாரம்பரிய கைவினைகள் நவீன சூழல்களுக்கேற்ப எவ்வாறு பரிணாமம் பெற்று வருகின்றன என்பதைக் கண்டறிதல்.

## 2. நடைமுறை அடிப்படையிலான கைவினை ஆராய்ச்சி

படைப்பாற்றல் நடைமுறைகள் மற்றும் கைவினை உருவாக்க செயல்முறைகளின் மூலம் உருவாகும் ஆராய்ச்சிகள்.

## 3. கைவினை, சமூகங்கள் மற்றும் கலாசார அடையாளம்

கைவினைகள் சமூகங்களையும் கலாசார தொடர்ச்சியையும் எவ்வாறு வடிவமைக்கின்றன என்பதைக் கவனத்தில் கொள்ளுதல்.

## 4. கைவினை ஆவணப்படுத்தல் மற்றும் டிஜிட்டல் பாதுகாப்பு

ஆவணப்படுத்தல் முறைகள், காப்பகங்கள், டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் பாரம்பரிய பாதுகாப்பு நடைமுறைகள்.

## 5. நிலைத்தன்மை மற்றும் படைப்பாற்றல் பொருளாதாரம்

நிலையான அபிவிருத்தி, வாழ்வாதாரம் மற்றும் கலாசாரத் தொழில்துறைகளில் கைவினைகளின் பங்களிப்பு.

## 6. பல்துறை மற்றும் துறைகளுக்கிடையேயான நடைமுறைகள்

பல்வேறு கல்வி மற்றும் தொழில்முறை துறைகளுடன் கைவினைகளை ஒருங்கிணைக்கும் ஒத்துழைப்பு அணுகுமுறைகள்.

## சமர்ப்பிப்பு வகைகள்

• ஆய்வுக் கட்டுரைகள்

• நடைமுறை அடிப்படையிலான ஆராய்ச்சி திட்டங்கள்

• கைவினை செயல்விளக்கங்கள்

• பயிற்சிப் பட்டறைகள்

• கண்காட்சிகள் மற்றும் நிறுவல் கலைப் படைப்புகள்

• சமூக நடைமுறை வழக்குக் கள ஆய்வுகள்

• ஒலி-ஒளி விளக்கக்காட்சிகள்

• ஆவணப்படத் திரையிடல்கள்

## சமர்ப்பிப்பு முறை

பங்கேற்பாளர்கள் 150–300 சொற்களைக் கொண்ட சுருக்கம் அல்லது ஆரம்ப முன்மொழிவை Word மற்றும் PDF வடிவங்களில் குறிப்பிடப்பட்ட இறுதித் திகதிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், விரிவாக்கப்பட்ட சுருக்கம் அல்லது முழுமையான முன்மொழிவை வழிகாட்டுதல்களுக்கு அமைவாக சமர்ப்பிக்க வேண்டும்.

# 1. விரிவாக்கம் (Extended Abstract)

## 1. ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிப்பு

**இலக்கு பங்கேற்பாளர்கள்:**
ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், முதுகலை மற்றும் இளங்கலை மாணவர்கள்.

**தேவைகள்:**

• தலைப்பு

• ஆசிரியர்(கள்) மற்றும் நிறுவனம்

• பின்னணி / பிரச்சினை விளக்கம்

• நோக்கங்கள்

• ஆய்வு முறை

• முக்கிய கண்டறிதல்கள் அல்லது எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்

• முக்கிய சொற்கள் (3–5)

**நீளம்:** 1000–1500 சொற்கள்

## 2. கட்டமைக்கப்பட்ட விளக்கவுரை

**இலக்கு பங்கேற்பாளர்கள்:**
கைவினைஞர்கள், வடிவமைப்பாளர்கள் மற்றும் சமூக ஆராய்ச்சியாளர்கள்.

**தேவைகள்:**

• விளக்கவுரையின் தலைப்பு

• பின்னணி

• நோக்கம்

• குறிக்கோள்கள்

• செயன்முறை

• பயன்படுத்தப்பட்ட பொருட்கள்

• பெறுபேறுகள்

• கைவினைப் பாதுகாப்புடன் தொடர்பு

• படங்கள் (விருப்பத்தேர்வு)

**நீளம்:** 1000–1500 சொற்கள்

### 3. நடைமுறை அடிப்படையிலான ஆராய்ச்சி

**தேவைகள்:**

• திட்டத் தலைப்பு

• கருத்துரு

• ஆய்வுக் கேள்வி

• நடைமுறை ஆய்வு முறை

• செயல்முறை ஆவணப்படுத்தல்

• புகைப்படங்கள் / வரைபடங்கள் / மாதிரிகள்

• பிரதிபலிப்பு அறிக்கை

**நீளம்:** 1000–1500 சொற்கள் மற்றும் காட்சிப் பதிவுகள்.

# 2. முன்மொழிவுகள்

### 1. கண்காட்சி முன்மொழிவு

• கண்காட்சித் தலைப்பு

• கருத்து விளக்கம்

• காட்சிப்படுத்தப்படும் படைப்புகளின் விவரம்

• தொழில்நுட்பத் தேவைகள்

• படைப்புகளின் படங்கள்

• கலைஞர் சுயவிவரம்

**நோக்கம்:** கைவினைக் கண்காட்சிகள், நிறுவல் கலைப் படைப்புகள் மற்றும் பாரம்பரிய காட்சிகள்.

## 2. பயிற்சிப் பட்டறை முன்மொழிவு

**இலக்கு பங்கேற்பாளர்கள்:**
மூத்த கைவினைஞர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்.

• பட்டறை தலைப்பு

• கற்றல் நோக்கங்கள்

• பட்டறை வடிவம்

• இலக்கு பயனாளர்கள்

• கால அளவு

• பொருள் தேவைகள்

**நோக்கம்:** செயன்முறை கற்றல் மற்றும் அறிவுப் பகிர்வு.

## 3. செயல்விளக்க முன்மொழிவு

**இலக்கு பங்கேற்பாளர்கள்:**
பாரம்பரிய கைவினைஞர்கள்.

• பிரதிநிதித்துவப்படுத்தப்படும் கைவினை மரபு

• செயல்விளக்க விவரம்

• கலாசார முக்கியத்துவம்

• கருவி / பொருள் தேவைகள்

• கால அளவு

**நோக்கம்:** பாரம்பரிய கைவினை நுட்பங்கள் மற்றும் அறிவு மரபுகளின் நேரடி செயல்விளக்கம்.

# முக்கிய திகதிகள்

ஆய்வுக் கட்டுரைகள் கோரல் அறிவிப்பு – 23 ஜூன் 2026

சுருக்கம் சமர்ப்பிக்கும் இறுதித் திகதி – 25 ஜூலை 2026

ஏற்றுக்கொள்ளல் அறிவிப்பு – 01 செப்டம்பர் 2026

இறுதி சமர்ப்பிப்பு – 30 செப்டம்பர் 2026

மாநாடு மற்றும் திறந்தநாள் – 30 அக்டோபர் 2026

# யார் பங்கேற்கலாம்?

• ஆராய்ச்சியாளர்கள்

• கல்வியாளர்கள்

• மாணவர்கள்

• கைவினைஞர்கள்

• வடிவமைப்பாளர்கள்

• கலைஞர்கள்

• அருங்காட்சியக நிபுணர்கள்

• கலாசார அலுவலர்கள்

• சமூக அமைப்புகள்

• சுயாதீன ஆராய்ச்சியாளர்கள்

• கொள்கை வடிவமைப்பாளர்கள்

• தொழில் முனைவோர்

# ஏற்பாட்டாளர்கள்

**தேசிய கைவினைப் பேரவை – இலங்கை**

ஒத்துழைப்பு

**காட்சிக்கலைப் பீடம்**

**இலங்கை நிகழ்கலை மற்றும் காட்சிக்கலைப் பல்கலைக்கழகம் (UVPA)**

# சமர்ப்பிப்பு தேவைகள்

விரிவாக்கப்பட்ட சுருக்கம்: 1000–1500 சொற்கள்

அனைத்து சமர்ப்பிப்புகளும் கைவினைப் பாரம்பரியம், பாதுகாப்பு, புத்தாக்கம், நிலைத்தன்மை அல்லது சமூக பங்களிப்பு ஆகியவற்றுடன் தெளிவான தொடர்பைக் கொண்டிருக்க வேண்டும்.

# தொடர்புகளுக்கு

மாநாட்டு இணையத்தளம்:

மின்னஞ்சல்: craftsforum2026@gmail.com

தொலைபேசி:

WhatsApp:

Facebook:

**"எதிர்கால தலைமுறைகளுக்காக கைவினைப் பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும், ஆவணப்படுத்தவும், ஆய்வு செய்யவும், புதிய பரிமாணங்களில் மீளக் கற்பனை செய்யவும் எங்களுடன் இணையுங்கள்."**

**இணைப்பு. 01**

**ஆய்வுச்சுருக்கத் தலைப்பு** – உங்கள் ஆய்வுச்சுருக்கத்தின் தலைப்பை இங்கு தட்டச்சு செய்யவும். **எழுத்துரு: Bamini**, எழுத்தளவு: **14 pt**.


**முதல் ஆசிரியர்[1]*, இரண்டாம் ஆசிரியர்[2], மூன்றாம் ஆசிரியர்[3]**

[1]முதல் நிறுவனம், நாடு, [2]இரண்டாம் நிறுவனம், நாடு, [3]மூன்றாம் நிறுவனம், நாடு

*தொடர்புடைய ஆசிரியரின் மின்னஞ்சல் முகவரி: example@email.com*


# ஆய்வுச்சுருக்கம்


ஆய்வுச்சுருக்கத்தில் ஆய்வின் பின்னணி, நோக்கங்கள், ஆய்வு முறை, பெறுபேறுகள், கலந்துரையாடல், முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் ஆகியவை தனித்தலைப்புகள் இன்றி சுருக்கமாக இடம்பெற வேண்டும். ஆய்வுச்சுருக்கம் ஒரு தொடர்ச்சியான பத்தியாக எழுதப்பட வேண்டும். மொத்த சொல் எண்ணிக்கை **300 சொற்களுக்கு மிகாமல்** இருக்க வேண்டும். உரையானது இடது மற்றும் வலது பக்கங்களிலிருந்து தலா **1 செ.மீ. உள்வெளியுடன்** அமைக்கப்பட வேண்டும். வரி இடைவெளி **1.0** ஆக இருக்க வேண்டும். முழு ஆய்வுச்சுருக்கமும் **Bamini எழுத்துருவில்**, **12 pt** எழுத்தளவில் தட்டச்சு செய்யப்பட வேண்டும். இவ்வார்ப்புருவில் வழங்கப்பட்டுள்ள வடிவமைப்பு, விளிம்புகள், வரி இடைவெளி மற்றும் அமைப்பில் எந்த மாற்றமும் செய்யக்கூடாது. ஆய்வின் நோக்கம், பயன்படுத்தப்பட்ட ஆய்வு முறை, முக்கிய கண்டறிதல்கள், அவற்றின் முக்கியத்துவம், முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் ஆகியவை தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும். மாநாட்டு வெளியீடுகளில் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து ஆய்வுச்சுருக்கங்களும் இவ்வார்ப்புருவில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட வேண்டும்.



**முக்கிய சொற்கள்:** ஆய்வின் உள்ளடக்கத்தை பிரதிபலிக்கும் **3–5 முக்கிய சொற்களை**, காற்புள்ளி (,) கொண்டு பிரித்து வழங்கவும்.